## இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை - 2013

இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1956 இன் 11 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட இறப்பர் ஆராய்ச்சி கட்டளைகள் சட்டத்தின் (439 ஆவது அதிகாரம்) 8(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று சபையின் தலைவருக்கு 2015 மார்ச் 18 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின்

ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

சபைக்குரிய டார்டன்பீல்ட் மற்றும் குருவிட்ட தோட்டங்களின் நிதிக்கூற்றுக்கள் நியம இலக்கம் 01 இல் குறிப்பிடப்படும் மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2010 ஆம் ஆண்டு வரை கணக்காய்வுக் கட்டணம் சபையால் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதுவரை மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 981,102 மிகை ஒதுக்கீட்டினை மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 ஆம் ஆண்டிலிருந்து நாள் சம்பளம் பெறும் 15 ஊழியர்களுக்காக ரூபா 491,400 தொகையான ஓய்வூதிய பணிக்கொடை ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 7,013,298 பெறுமதியான களஞ்சிய இருப்புக்கள் மீள் மதிப்பீடு செய்யப்படாமல் புத்தக பெறுமதி அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) டார்டன்பீல்ட் இறப்பர் தொழிற்சாலையின் இறப்பர் இருப்பு, புகை வீடு, காயவைக்கும் கோபுரம் (Smoke House and Drying Tower) மற்றும் ரேடியேற்றர் தொகுதி என்பன 2014 சனவரி 24 ஆம் திகதி ஏற்பட்ட திடீர் தீ விபத்துக் காரணமாக முழுமையாக அழிவடைந்திருந்தது. தொழிற்சாலையை மீளமைப்பதற்காக ரூபா 4,600,000 செலவாகுமென மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், ஐந்தொகை திகதிக்கு பின்னர் இடம்பெற்ற நிகழ்ச்சியாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ஏனைய மூலதனக் கொடைகளாக கணக்குகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 13,460,425 தொகையான பல்வேறு செயற்திட்ட மானியங்களுக்குரிய உடன்படிக்கைகள், மானியமாக கிடைத்த மூலதன பொருட்கள் மற்றும் அவற்றின் பெறுமதி, அம்மானியங்கள் கிடைத்த திகதிகள், செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்ட திகதிகள், பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் பெறுமானத்தேய்வு விகிதம் தொடர்பான விபரங்கள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 22,757,836 தொகையான கடன்பட்டோர் மற்றும் ஏனைய கடன்பட்டோர் கணக்கு மீதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள 5 ஆண்டுகளுக்கும் மேலான காலமாக நிலவிவரும் 667 பழைய கடன்பட்டோருக்கு உரிய ரூபா 15,186,913 தொகையான மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையால் 1985 ஆம் ஆண்டின் போது ஓர் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக மதியுரை சேவைகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 5,214,500 தொகையான முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்துவம் வகிக்கும் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்கு இணைக்கப்பட்ட ஊழியர்களுக்காக 2000 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையான காலப்பகுதிக்குரிய அத்திணைக்களத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,747,981 அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பட்டதாரிகளைப் பயிற்றுவிப்பதற்காக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சிடமிருந்து 2010 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 712,426 தொகை தொடர்ந்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலவி வரும் ரூபா 10,940,983 கூட்டுத்தொகையான செயற்திட்டக் கடன்பட்டோர் மீதியில் ரூபா 3,776,532 தொகையான 22 மீதிகள் அறவிடப்படுவது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அறவிடப்பட வேண்டிய ரூபா 426,013 கூட்டுத்தொகையான வைப்பு மீதியில் 11 நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 411,013 தொகையானது 08 ஆண்டுகளைப் பார்க்கிலும் பழைமையான மீதியாக இருந்ததுடன் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) ரூபா 15,526,699 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட 2002 ஆம் ஆண்டிலிருந்து ஜனதா உரக் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய ரூபா 298,577 தொகை 2014 திசெம்பர் 08 ஆம் திகதி வரை தீர்வு செய்யப்படாமல் இருந்ததுடன், குறித்த பட்டியல் சபையிடம் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) 43 நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய 2 ஆண்டுகளுக்கும் 5 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய ரூபா 627,318 தொகையும் 139 நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 5,788.450 ஆன கடன் கொடுத்தோர் மீதிகள், கணக்குகளில் தொடர்ச்சியாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2008 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 66,457 தொகையான மேலதிக நேர வேலையை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் தொடர்ந்தும் செலுத்த வேண்டிய கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (அ) நிதிப் பிரமாணம் 371(2) | (i) 2 உத்தியோகத்தர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 48,000 கூட்டுத்தொகையான உப கட்டுநிதி 13 நாட்கள் முதல் 2 மாதங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் கையில் வைத்திருக்கப்பட்டு முழுப்பணத்தையும் மீண்டும் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. |
| | (ii) 12 உத்தியோகத்தர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 158,000 கூட்டுத்தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதி மீள் நிரப்பல் 3-10 மாதங்களுக்கு இடைப்பட்ட காலம் தாமதமாக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) நிதிப் பிரமாணம் 396 | விநியோகிக்கப்பட்ட போதும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்கள் கடந்த ரூபா 166,426 பெறுமதியான காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | நிதிப் பிரமாணம் 1646 | குழாம் வாகனங்களுக்குரிய ஓட்டப் பதிவேடுகளின் பொழிப்புக்கள் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் சபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 84,950,295 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை 68,627,910 ஆக இருந்தது. முனனைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 16,322,385 ஆன வீழ்ச்சி சுட்டிக்காட்டியிருந்ததுடன் இது 24 சதவீதமாகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக சபையின் சம்பளம் மற்றும் வேதனங்கள் 7 சதவீதத்தால் அதிகரித்தமையும், டார்டன்பீல்ட் தோட்டத்தின் இலாபம் 42 சதவீதத்தால் குறைவடைந்தமையும், குமாரவத்த மற்றும் நாரம்பொல தோட்டங்களின் நட்டம் முறையே 34 சதவீதத்தாலும் 31 சதவீதத்தாலும் அதிகரித்தமையும் இதற்காக தாக்கமளித்திருந்தது.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் தோட்டங்களுக்குரிய செலவினம் தவிர்ந்த சபையின் மொத்த செலவினம் ரூபா 320,648,346 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் மொத்த செலவினம் ரூபா 312,621,408 உடன் ஒப்பிடுகையில் 2.56 சதவீத அதிகரிப்பொன்றாக இருந்தது.

(ஆ) டார்டன்ட்பீல்ட் மற்றும் குருவிட்ட ஆகிய இரண்டு தோட்டங்களின் ஒட்டுமொத்த இலாபம் ரூபா 39,908,882 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அது ரூபா 53,689,073 ஆக இருந்ததனால் மீளாய்வாண்டின் இலாபத்தின் குறைவு 25.7 சதவீதமாகக் காணப்பட்டது. குமாரவத்தை மற்றும் நாரம்பொல ஆகிய இரண்டு தோட்டங்களின் ஒட்டுமொத்த நட்டம் ரூபா 9,997,046 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டில் நட்டம் ரூபா 7,506,187 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நட்டத்தின் அதிகரிப்பு 33.2 சதவீதமாகக் காணப்பட்டது. நான்கு தோட்டங்களையும் கருத்திற் கொள்ளும் போது உழைத்த ஒட்டுமொத்த இலாபம் மீளாய்வாண்டின் போது ரூபா 29,911,836 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டில் அது ரூபா 46,187,887 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் இலாபத்தில் குறைவு 35.2 சதவீதமாக இருந்தது. இறப்பர் விற்பனை விலை முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 9 சதவீதத்தால் குறைவடைந்தமை, சீரற்ற காலநிலை மற்றும் அதிகரித்த ஊழியர் சம்பளம் என்பன இந்த இலாபம் குறைவடைவதற்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தன.

**3.3 நிறுவகத்திற்கு எதிராக அல்லது நிறுவகத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்**

மூன்று நபர்களால் சேவையை இடைநிறுத்தல் தொடர்பாக நட்டஈடு கோரி சபைக்கு எதிராக நீதிமன்றங்களில் 03 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் டார்டன்ட்பீல்ட் தோட்டத்தின் ஒரு ஹெக்டயருக்கான இறப்பர் பால் உற்பத்தி 63 கிலோ கிராமினால் குறைவடைந்திருந்ததுடன், குருவிட்ட தோட்டத்தின் ஒரு ஹெக்டயருக்கான இறப்பர் பால் உற்பத்தி 8 கிலோ கிராமினால் அதிகரித்திருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வாழ்வின் எழுச்சி தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறிய இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு இறப்பர் நாற்றுக்களை பகிர்ந்தளிப்பதற்காக சபைக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 12 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், அம்பாந்தோட்டை, அம்பாறை, முல்லைதீவு, வவுனியா மற்றும் மன்னார் போன்ற 05 மாவட்டங்களுக்காக இறப்பர் நாற்றுக்கள் கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 12 மில்லியன் நிதிஏற்பாட்டை மிகைத்து நாற்றுக்கள் கொள்வனவு செய்வதற்கு ரூபா 956,700 தொகையும், நாற்றுக்களைக் கொண்டுசெல்வதற்காக ரூபா 4,396,351 தொகையுமாக ரூபா 5,353,051 தொகை கூடுதலாக செலவிடப்பட்டிருந்தன.

(ii) மீளாய்வாண்டின் போது ரூபா 12,956,700 பெறுமதியான இறப்பர் நாற்றுக்களை கொள்வனவு செய்யும் போது அரசின் கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) நாற்றுக்களை பகிர்ந்தளிக்கும் பிரதேசங்களுக்கு அண்மித்த நாற்றுமேடைகளிலிருந்து கொள்வனவு செய்யாமை, ஒரு தடவையில் போக்குவரத்து செய்யக்கூடிய ஆகக்குறைந்த நாற்றுக்கள் தொடர்பான இணக்கப்பாடொன்று இல்லாமை, போக்குவரத்து தூரம் மற்றும் தடவைகளின் எண்ணிக்கையை கணக்கிடுவதற்கு குறிப்பான கட்டுப்பாட்டு முறைமையொன்று பின்பற்றாமை போன்ற காரணங்களின் அடிப்படையில் நாற்றுக்களுக்கான போக்குவரத்துச் செலவினம் திரட்டிய செலவினத்தின் 25 சதவீதத்தை மிகைத்திருந்ததுடன், ஒரு நாற்றுக்கான போக்குவரத்துச் செலவினம் ரூபா 20 இற்கு அண்மித்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

(iv) பாதுகாப்பாக போக்குவரத்துச் செய்யாத காரணத்தால் ரூபா 1,001,440 பெறுமதியான இறப்பர் நாற்றுக்கள் அழிவடைந்திருந்ததுடன், அந்நட்டத்தை போக்குவரத்தில் ஈடுபட்டவர்களிடமிருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) இறப்பர் நாற்றுக்களைக் கொள்வனவு செய்வதற்கும் போக்குவரத்துச் செய்வதற்கும் உரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் தெரிவுப் பரிசோதனையின் போது உரிய அங்கீகாரமின்றி 23 கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் மூலம் ரூபா 9,220,452 தொகை செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீள்நிர்மாணத்திற்காக ரூபா 4,600,000 தொகை செலவாகுமென மதிப்பீடு செய்யப்பட்டிருந்த, 2014 சனவரி 24 ஆம் திகதி ஏற்பட்ட திடீர் தீ விபத்து காரணமாக முழுமையாக அழிவடைந்த டார்டன்பீல்ட் இறப்பர் தொழிற்சாலையின் புகை வீடு மற்றும் காயவைக்கும் கோபுரம் என்பன அதன் பழைய புத்தகப் பெறுமதியான ரூபா 936,000 தொகையான குறைந்த பெறுமதிக்கு காப்புறுதி செய்யப்பட்டிருந்தமையால் காப்புறுதி இழப்பீடாக கிடைத்த பெறுமதி ரூபா 702,518 இற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஓய்வுபெற்றுச் சென்ற தொழிற்சாலை உத்தியோகத்தருக்குப் பதிலாக பயிற்றப்படாத முகாமைத்துவ உதவியாளர் ஒருவரையும் வலது குறைந்த அலுவலக உதவியாளர் ஒருவரையும் தொழிற்சாலைக்கு நியமனம் செய்திருந்ததுடன், அவர்களின் தொழில்நுட்ப அறிவின்மையும் கவனமின்மை காரணமாகவும் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், குறித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு தேவையான நடைமுறைகளை எடுப்பதற்கு சபை நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான 04 தோட்டங்களுக்குரிய மீளாய்வாண்டின் சனவரி முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக ரூபா 40,511,901 கூட்டுத்தொகையான ஊழியர் சேமலாப பங்களிப்புத் தொகை நிதியத்திற்குச் செலவு வைத்தல் 18 நாட்கள் முதல் 5 மாதங்களுக்கு இடைப்பட்ட கால தாமதத்தால் ரூபா 437,663 தொகை மிகை அறவீடாக நிதியத்திற்கு செலுத்த நேர்ந்திருந்தது.

(ஈ) சபையிடமிருந்த லொறியின் உடலை மீளமைப்பதற்குக் கொண்டு செல்லப்பட்டு திருப்பி வழங்காதது தொடர்பாக நிறுவகத்தினால் உரிய நபருக்கு எதிராக ரூபா 730,000 தொகை நட்டஈடு கோரி மத்துகம மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன், அவ்வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் பிரதிவாதி குற்றவாளியாகி இருந்த போதும், குறித்த தொகை 2014 திசெம்பர் 08 ஆம் திகதி வரையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2006 சனவரி 25 ஆம் திகதிய NPA 08 கொள்வனவுச் சுற்றறிக்கையின் 3.4 ஏற்பாடுகளுக்கு முரணாக 2013 சனவரி 10 முதல் 2013 செப்தம்பர் 13 வரையான காலப்பகுதியில் 9 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,109,115 பெறுமதியான பூச்சுக்கள் கொள்வனவு செய்யும் போது சபையின் பெயரில் அல்லாது வேறு பதிவு செய்யப்பட்ட கொள்வனவாளரின் பெயருக்கு அக்கொள்வனவு மேற்கொள்ளப்பட்டு ரூபா 118,833 தொகையான பெறுமதி சேர் வரியும் அக்கொள்வனவாளர் பெயரில் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.3 முறையாக பொறுப்பேற்கப்படாத காணிகளில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்

குமாரவத்த மற்றும் நாரம்பொல தோட்டங்களின் உரித்தைப் பொறுப்பேற்றல் 2013 பெப்ரவரி இறுதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு பொது முயற்சிகளுக்குரிய கணக்கு குழு 2012 ஒக்தோபர் 02 ஆம் திகதி கட்டளையிட்டிருந்த போதிலும், 2014 திசெம்பர் வரையிலும் சபை அவற்றை பொறுப்பேற்றிருக்கவில்லை. 2006 ஆம் ஆண்டிலிருந்து இவ்விரண்டு தோட்டங்களுக்காக ரூபா 8,320,000 உத்தேச

வாடகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், உரித்தைப் பொறுப்பேற்பதற்காக ரூபா 27,250,000 தொகை தேசிய பாதீட்டு திணைக்களத்திடமிருந்து கோரப்பட்டிருந்தது.

**4.4 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் கேட்போர்கூட நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் 2011 செப்தெம்பர் 28 ஆம் திகதி ரூபா 28,838,759 தொகைக்கு தனியார் நிறுவனமொன்றிற்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்ததுடன், குறித்த நிர்மாணம் 270 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. 2013 செப்தெம்பர் வரையிலும் இதன் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததுடன், தாமதக் கட்டணம் தொடர்பான நிபந்தனை உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாமையால் தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு சபைக்கு முடியாதிருந்தது. நிலத்தின் தகைமையை பரிசோதிக்காமல் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டமையால் கட்டிடத்தின் பாதுகாப்பிற்காக பக்கச்சுவரொன்று நிர்மாணிப்பதற்கு நேர்ந்திருந்ததுடன், அச்செயற்பாட்டையும் ஒப்பந்தக்காரருக்கு ஒப்படைத்து ரூபா 2,007,487 தொகை மேலதிகச் செலவொன்று மேற்கொண்டு நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கேட்போர்கூடத்திற்கு மின்விளக்குகளைப் பொருத்துவதற்கும் காற்றுச்சீராக்கிக்கும் மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 3,548,580 தொகையாக இருந்த போதிலும், ரூபா 4,199,456 தொகைக்கு மேற்படி நிறுவகத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) ஒப்பந்தத்தை அளிப்புச் செய்ததன் பின்னர் ஆரம்ப மதிப்பீட்டின் பிரகாரம் கேட்போர்கூடத்தின் பிரதான மண்டபத்தின் மின்விளக்குகளை பொருத்தும் முறை தெளிவற்றதாக குறிப்பிடப்பட்டு வேறு நிறுவனமொன்றிடமிருந்து மீளவும் மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அம்மதிப்பீட்டின் பிரகாரம் குறித்த செயற்பாட்டிற்குரிய செலவினம் ரூபா 3,747,845.00 ஆக இருந்தது. பின்னர் அதிலும் ரூபா 1,301,160 மதிப்பீட்டுத் தொகையான சில தெரிவுசெய்யப்பட்ட செயற்பாடுகளை மாத்திரம் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

**4.5 வாகனப் பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது இடம்பெற்றிருந்த 05 வாகன விபத்துக்கள் காரணமாக ரூபா 1,392,269 ஆன நட்டங்கள் ஏற்பட்டிருந்ததுடன், காப்புறுதி மேவுகையால் ஈடுசெய்யப்படாத ரூபா 185,372 தொகையான நட்டத்திற்காக பொறுப்புவாய்ந்தவர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் அந்நட்டம் சபையால் ஈடுசெய்யப்பட்டிருந்தது.

(ஆ) நாளதுவரையாக எரிபொருள் நுகர்வு தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு சம்பவப் பதிவேட்டுப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 குறைப்பயன்பாட்டிற்குரிய சொத்துக்கள்**

06 வாகனங்கள் திருத்தியமைக்கப்படாமல் நீண்டகாலமாக சபையின் வளவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

**4.7 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 470 ஆக இருந்ததுடன், உள்ளபடியான பதவியணியினர் 355 ஆக இருந்தனர். செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு உரித்தாகும் அங்கீகரிக்கப்பட்ட 21 சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகளும், மத்திய முகாமைத்துவ மட்டத்தில் 27 பதவிகளும் கனிஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 56 பதவிகளும், ஆரம்ப மட்டத்தில் 11 பதவிகளும் வெற்றிடங்களாக காணப்பட்டன.

(ஆ) பொருளதார ரீதியாக செயற்திறனானதும் சூழலுக்கு சாதகமான நிரந்தர புதிய கண்டுபிடிப்புக்கள் ஊடாக இனங்காணப்பட்ட புதிய தொழில்நுட்ப பயிற்சி மற்றும் ஆலோசனை சேவைகளை, பயிரிடுபவர்களுக்கும் இறப்பர் பொருள் உற்பத்தியாளர்களுக்கும் வழங்குவதன் மூலம் இறப்பர் கைத்தொழிலை மேம்படுத்துவது சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பணியாக இருந்த போதிலும், அதனை நிறைவேற்றும் ஆரம்ப பொறிமுறையான ஆராய்ச்சி பதவியணியினர் தொடர்பாக போதியளவு கவனம் செலுத்தப்படாமல் இருந்ததுடன், 2014 திசெம்பர் வரையில் 08 ஆராய்ச்சிப் பிரிவு தலைவர் பதவிகள், 07 தலைமை ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகள், 12 சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகள், 14 ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகள், 23 ஆராய்ச்சி தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 03 மதியுரை உத்தியோகத்தர் பதவிகள் என்ற ரீதியில் ஆராய்ச்சி செயற்பாடுகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த 67 பதவிகள் வருடக் கணக்காக வெற்றிடங்களாக இருந்து வந்தன.

(இ) ஆட்சேர்ப்பு மற்றும் பதவிஉயர்வு நடைமுறைகள் முன்னரே நிர்ணயிக்கப்பட்ட நபர்களுக்கு சாதகமான வகையில் அவ்வப்போது திருத்தியமைத்தல், பரீட்சை நடைமுறைகள் நியாயமான முறையில் நடைமுறைப்படுத்தாமை, கீழ் மட்ட உத்தியோகத்தர்கள் தமது அண்மித்த தலைமைத்துவத்தை மிகைத்துச் செயற்படுதலும் அலுவலக கோவைகளை பரிமாறலும், மேல்மட்ட உத்தியோகத்தர்களால் அந்தந்த பிரிவுத் தலைவர்களைக் கருத்திற் கொள்ளாமல் கீழ் மட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக நேரடி ஈடுபாட்டை மேற்கொள்ளல் போன்ற பல நிர்வாகப் பலவீனங்கள் சபையின் இலக்கை நிறைவேற்றுதற்கு தடையாகும் வகையில் நடைமுறைப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கணக்குகள் கணக்காய்விற்காக நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள்

சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், சபையின் கணக்குகள் 05 மாதங்கள் 13 நாட்கள் தாமதத்தின் பின்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.2 கூட்டிணைந்த திட்டம்**

2013 - 2017 காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அது. முன்னைய ஆண்டுகளுக்குரிய நிதித் தகவல்கள் மற்றும் 05 ஆண்டு காலத்தில் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக இலக்குகளுக்குரிய நிதிப்பெறுமதி என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் 03 செலவு விடயங்களுக்காக மதிப்பீட்டுச் செலவினம் 5 சதவீதத்திலிருந்து 62 சதவீத வீச்சிலான அளவில் மிகைத்து பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது மூலதனச் செலவினத்திற்காக ரூபா 60 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் உள்ளவாறான செலவுகள் ரூபா 44.4 மில்லியனாக இருந்தது. இதன் பிரகாரம், சபையால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(இ) இருப்புக் கட்டுப்பாடு
(ஈ) கணக்கீடு
(உ) ஆராய்ச்சி நடவடிக்கைகளின் நிர்வாகம்